# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 026/மா/2019**
**ஆணை நாள்: 26–2–2020**

திரு. P.V. கிஷோர்,
ராயலா நகர், இராமாபுரம்,
சென்னை – 600 089. – **முறையீட்டு மனுதாரர்**

மண்டல அலுவலர், மண்டலம் -11,
பெருநகர சென்னை மாநகராட்சி. – **எதிர் மனுதாரர்**

சென்னை – 89, இராமாபுரம், ராயலா நகர், 3வது மெயின் ரோடு, எண். 88 என்ற முகவரியில் வசிக்கும் திரு. P.V. கிஷோர் என்பவரது 6.2.2019 நாளிட்ட மனு 12.02.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு முறையீட்டு மனு எண். 26/மா/2019 என எண்ணிடப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர் தனது 6.2.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில், பெருநகர சென்னை மாநகராட்சி, 11வது மண்டலம், 155வது கோட்டம், ராயலா நகர் 3வது மெயின் ரோடு வள்ளுவர் சாலை முகப்பில் KRG டீ ஸ்டால் உரிமையாளர் தனது வீட்டை புதுப்பித்து வருகையில் மூன்றாவது மெயின் ரோட்டையும், வள்ளுவர் சாலை நடை பாதையையும் ஆக்கிரமித்து கட்டிட பணிகளை மேற்கொள்கிறார் என்றும், அவரது கடை ராயலாநகர் வள்ளுவர் சாலை முகப்பில் அமைத்துள்ளதால், ஏற்கனவே 30 அடி சாலையாக இருக்க வேண்டிய 3வது மெயின் ரோடு 20 அடி, 12 அடி என சாலைகள் ஆக்கிரமிப்பால் குறுகியுள்ள நிலையில், KRG டீ ஸ்டால் முதல் தொடர்ந்து மூன்று கடைகளுக்கு வருவோர், 3வது மெயின் ரோட்டின் முகப்பில் இருபுறமும்,

கார் மற்றும் இருசக்கர வாகனங்களை, நிறுத்திவிட்டு மேற்படி கடைகளுக்கு சென்று வருவதால் 3வது மெயின் ரோடு வழியாக செல்ல வேண்டிய பள்ளி வாகனங்கள், மாநகராட்சி குப்பை லாரிகள், மெட்ரோ குடிநீர் லாரிகள், கழிவுநீர் லாரிகள், ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டிகள் மற்றும் குடியிருப்போரின் கார் மற்றும் இதர இலகுரக வாகனங்கள் செல்ல மிகவும் சிரமமாக உள்ளது என்றும், இதனால் விபத்துகள் ஏற்படும் நிலை உள்ளது என்றும், இவ்வாக்கிரமிப்புகளை அகற்றியிட ஆணையிடுமாறும் கோரியுள்ளார்.

இம்முறைன்ற நடுவத்தின் 20.2.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை சமர்ப்பிக்க பெருநகர சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலர் தனது 14.10.2019 நாளிட்ட அறிக்கையில், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள திருவள்ளூர் சாலை, நெடுஞ்சாலை துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதால், புகார் குறித்து நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கோட்டப் பொறியாளர் நெடுஞ்சாலை துறை, திருவள்ளூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், நெடுஞ்சாலைத்துறை ஆக்கிரமிப்பை அகற்றும் பட்சத்தில், பெருநகர சென்னை மாநகாட்சி முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று தெரிவித்துள்ளார். மேலும் தனது 29.11.2019 நாளிட்ட அறிக்கையில் புகார் சம்மந்தமாக 10.9.2019 அன்று செயற்பொறியாளர் மற்றும் உதவிசெயற்பொறியாளர் ஆகியோரால் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள திருவள்ளூர் சாலை நெடுஞ்சாலை துறையின் கீழ் வருவதால் கடந்த 30.9.2019 அன்று நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், தற்காலிகமாக நடைபாதையை ஆக்கிரமித்துள்ள கடைகள் (Temporary Structure) பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக அகற்றப்பட்டது என்றும், மேற்படி ஆக்கிரமிப்புகளை நிரந்திரமாக அகற்றுவதற்கு மேற்பார்வை பொறியாளர் நெடுஞ்சாலைத்துறை, திருவள்ளூர் அவர்களுக்கு 25.11.2019 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், நெடுஞ்சாலைத் துறை ஆக்கிரமிப்பை அகற்றும் பட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி முழு ஒத்துழைப்பை அளித்து ஆக்கிரமிப்பை அகற்ற உறுதுணையாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரருக்கு மேற்படி விபரங்களை தெரிவித்து எழுதிய கடித நகலினையும் அனுப்பியுள்ளார்.

முறையீட்டு மனுதாரர் மற்றும் சாட்சிகள் விசாரணைக்கு 14.8.2019 அன்று ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, 11வது மண்டலம், 155வது டிவிஷன் ராயலா நகர் 3வது மெயின் ரோடு மற்றும் வள்ளுவர் சாலை முகப்பில் சாலையை ஆக்கிரமித்து கட்டிடம் கட்டி வியாபாரம் செய்து போக்குவரத்திற்கு இடையூறு செய்துள்ள்னர் என்றும், பள்ளி வாகனங்கள், மாநகராட்சி குப்பை லாரிகள், மெட்ரோ குடிநீர் லாரிகள், தீயணைப்பு வண்டி, ஆப்புலன்ஸ் வண்டி மற்ற வாகனங்கள் நுழைந்து செல்ல மிகவும் சிரமமாக உள்ளது என்றும், 3வது மெயின் ரோடு முகப்பில் KRG டீ ஸ்டால் முதல் தொடர்ந்து ராயலா நகர் லே அவுட் முதல் மெயின் ரோடு இறுதிவரை வள்ளுவர் சாலையை ஆக்கிரமித்து 1,2,3 வது மெயின் ரோடு முதல் வள்ளுவர் சாலைக்கு செல்லும் போக்குவரத்து வாகனங்கள் மிகுந்த பயத்துடனே செல்கின்றன என்றும், இந்த ஆக்கிரமிப்புகளால் எங்கள் 3வது மெயின் ரோட்டில் அடிக்கடி குடியிருப்போருக்கும் இடையூராக வாகனங்குளை நிறுத்துவோருக்கும் அடிக்கடி சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு வருகிறது என்றும், இது சம்பந்தமாக 30.9.2019 சென்னை பெருநகர மாநகராட்சி 11வது மண்டல அலுவலருக்கும் 2.2.2019ல் தமிழ்நாடு நெடுச்சாலை துறைக்கும் புகார் மனு அனுப்பியிருந்தோம் என்றும், மேலும், அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி 3வது மெயின் ரோட்டின் அகலம் 30 அடி ஆனால் தற்பொழுது சாலையின் அகலம் 15 அடி முதல் 20 அடி மட்டுமே உள்ளது என்றும், மீதி இடங்கள் பாக்கியலஷ்மி நகர் மற்றும் அன்னம் அவன்யுவிலுள்ள வீட்டு உரிமையாளர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், இதனால் போக்குவரத்து நெரிச்சல் அடிக்கடி ஏற்படுகிறது என்றும், இது சம்பந்தமாக நாங்கள் 15.5.2014 அன்று சென்னை மாநகராட்சி மேயர் அவர்களுக்கும் மற்றும் மண்டல அலுவலருக்கும் மனு அளித்துள்ளோம் என்றும், 7.8.2014 மற்றும் 15.9.2014 அன்றும் மதுரவாயல் சட்டமன்ற உற்றுப்பினருக்கும், 9.10.2015 அன்று வட்டாட்சியர் மற்றும் மண்டல நல அலுவலருக்கும் மனு அளித்துள்ளோம் என்றும், மேலும் 15.10.15 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் தனி பிரிவு மற்றும் ஆணையர் சென்னை மாநகராட்சி அவர்களுக்கும் மனு அளித்துள்ளோம் என்றும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் இல்லை என்றும், தெரிவித்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள பகுதிகளுக்கான புகைபடமும், ராமாபுரம், ராயலா நகர் கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வரைடபத்தையும், தற்பொழுது உள்ள அங்கீகரிக்கப்படாமல் கட்டப்பட்டுள்ள விவங்கள் அடங்கிய வரைபடத்தையும் சமர்ப்பித்தார்கள்.

இம்முறைமன்ற நடுவத்தின் 6.11.2019 நாளிட்ட அழைப்பாணையின்படி 4.12.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலர் விசாரணைக்கு ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் புகாரில் கூறப்பட்டுள்ள பகுதி 10.9.2019 அன்று செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், புகாரில் கூறப்பட்டுள்ள திருவள்ளுர் சாலை நெடுஞ்சாலையின் கீழ் வருவதால் 30.9.2019 அன்று நெடுஞ்சாலை துறை கோட்ட பொறியாளருக்கு கடிதம் எழுத்தப்பட்டுள்ளது என்றும், தற்காலிகமாக நடைபாதையை ஆக்கிரமித்துள்ள கடைகளை பெருநகர சென்னை மாநகரட்சி மூலமாக அகற்றப்பட்டது என்றும், மேலும் மேற்பார்வை பொறியாளர் நெடுஞ்சாலை துறை திருவள்ளுர் மாவட்டத்திற்கு நிரந்தர நடைபாதை ஆக்கிரமிப்புகளை அகற்றவதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும், நெடுஞ்சாலை துறை ஆக்கிரமிப்பை அகற்றும் நேரத்தில் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு சென்னை பெருநகர மாநகராட்சி உறுத்துணையாக இருக்கும் என்றும், இதுகுறித்து தொடர்ந்து கோட்ட பொறியாளரை தொடர்பு கொண்டதன் அடிப்படையில் 11.12.2019 மற்றும் 12.12.2019 அன்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன என்றும், ஆக்கிரமிப்பை அகற்றும் போது போதிய பாதுகாப்பு அளிப்பதற்காக ராமாபுரம் காவல் நிலைய ஆய்வாளருக்கு நெடுஞ்சாலை துறை உதவி பொறியாளர் 21.9.2019 அன்று கடிதம் எழுதி உள்ளார் என்றும், சம்மந்தப்பட்ட நாளில் மாநகராட்சி சார்பாகவும் சம்மந்தப்பட்ட பணியாளர்களுடன் இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்றவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை, மனுதாரர் மற்றும் சாட்சிகள் அளித்த வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலரின் அறிக்கைகள் மற்றும் விசாரணையின்போது அளித்த வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலர் விசாரணையின் போது ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அனைத்து ஏற்பாடுகளுக்கு செய்யப்பட்டது என்றும், ஆக்கிரமிப்புகளை அகற்றும் போது போதிய பாதுகாப்பு அளிக்க காவல்துறைக்கு கடிதம் எழுதப்பட்டதாக தெரிவித்தார். எனவே, இந்நேர்வில் மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு நெடுஞ்சாலை துறை கோட்டப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், திருவள்ளுர் தொடர் நடவடிக்கைகள் எடுத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு

மாநகராட்சி சார்பில் உரிய துரித நடவடிக்கை எடுக்க பெருநகர் சென்னை மாநகராட்சி 11வது மண்டல அலுவலருக்கு அறிவுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது. அதன்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை 30 தினங்களுக்குள் சமர்ப்பிக்கவும் வலியுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2020 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

(1) திரு. P.V. கிஷோர்,
தலைவர்,
ராயலா நகர் வெல்பர் அசோசியேசன்,
எண். 88, 3வது மெயின் ரோடு,
ராயலா நகர், இராமாபுரம்,,
சென்னை – 600 089.

(2) மண்டல அலுவலர்,
மண்டலம் -11,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண். 123, ஆற்காடு சாலை,
வளசரவாக்கம், சென்னை – 600 087.

நகல்

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்